# கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்

## அமர்வு வழக்கு எண். 195/2025

### அ.சா.1 (LW 1 )

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | **திரு. லாரன்ஸ்** | **தொழில்** | **சிறப்பு சார்பு ஆய்வாளர்** |
| **த/க பெயர்** | ஆரோக்கியம் | **மதம்** | |
| **கிராமம்** | | **வயது** | |
| **தாலூகா** | | **தேதி** | **.2026** |

1873ம் வருடத்திய சட்டம் பிரிவு 10ன்படி பிரமாணத்தின் பேரில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

எதிரி ஆஜர்.

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது திண்டுக்கல் நகர் மேற்கு காவல்நிலையத்தில் சிறப்பு சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 06,01.2025ம் தேதி நகர் மேற்கு காவல்நிலையத்தில் சிறப்பு சார்பு ஆய்வாளராக பணியிலிருந்தபோது நான் மற்றும் சார்பு ஆய்வாளர் மலைச்சாமி, முதல்நிலை காவலர் பிரகாஷ் ஆகியோர்களுடன் குற்ற தடுப்பு நடவடிக்கையாக ரோந்து சென்று கொண்டிருந்த போது திண்டுக்கல் ஆர்.எம்.காலனி மயானம் ரோட்டில் நீளமான மரக்கைப்பிடியுடன் கூடிய வாளுடன் இருந்த நபரை பிடிக்க முயற்சி செய்ய என்னை பிடித்தால் தாயோளி மகன்களே உங்களை கொன்று விடுவேன் என்று மிரட்டியவரை போலிஸ் பார்ட்டியுடன் சுற்றி வளைத்து பிடிக்க கார்த்திக் என்ற பொக்கை கார்த்தி , த/பெ . கோபி, மருதாணி குளம் என்று பெயர், விலாசம் சொன்னவரை வாளுடன் இருந்தவரை விசாரிக்க எனக்கு நிலக்கோட்டையில் கொலை வழக்கு மற்றும் நகர் மேற்கு காவல்நிலையத்தில் ஆயுத வழக்கு உள்ளது. மேற்படி வழக்கிற்காக வழக்கறிஞருக்கு பீஸ் கொடுக்க பணம் இல்லாததால் போவோர், வருவோரிடம் வாளை காட்டி மிரட்டி பணம் பறிக்கலாம் என நினைத்து சுற்றி வருவதாக சொன்னார். அதனால் சார்பு ஆய்வாளர் கார்த்திக் என்ற பொக்கை கார்த்திக்கை 11.15 மணிக்கு கைது செய்து அவர் வைத்திருந்த வாளை அத்தாட்சியில் கைப்பற்ற தனிநபர் சாட்சிகள் யாரும் முன்வராததால் எங்கள் இருவர் முன்னிலையில் அத்தாட்சியில் 11.30மணிக்கு கைப்பற்றினார். நாங்கள் இருவரும் கையெழுத்து செய்தோம். என்னிடம் காட்டப்படும் அத்தாட்சி இதுதான். அது **அ.த.சா.ஆ.1** ஆகும். என்னிடம் காட்டப்படும் வாள் அத்தாட்சியில் கைப்பற்றியதுதான். **அது சா.பொ.1.** ஆகும். இன்று நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ள எதிரிதான் அன்று சம்பவத்தன்று நாங்கள் கைது செய்த நபர்ஆவார். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

வழக்கின் சம்பவ இடமானது பொதுமக்கள் மிகுந்த பகுதி என்றால் சரிதான். எதிரியிடம் என் முன்பாக சார்பு ஆய்வாளர் வாக்குமூலமோ, ஒப்புதல் வாக்குமூலமோ எதுவும் வாங்கவில்லை என்றால் சரிதான். சம்பவ இடத்திற்கு சார்பு ஆய்வாளர் அத்தாட்சி படிவம் கொண்டு வந்தததாக ஆய்வாளர் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். அத்தாட்சி படிவம் காவல்நிலையத்தில் வைத்து தட்டச்சு செய்யப்பட்டதா என்றால் சம்பவ இடத்தில் வைத்துதான் தட்டச்சு செய்யப்பட்டது. அத்தாட்சியை யார் டைப் செய்தார்கள் என ஆய்வாளர் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். அத்தாட்சியில் கைப்பற்றப்பட்ட வாள் பொதுவாக இரும்பு பட்டறையில் செய்யக் கூடியதுதான். சம்பவ இடத்தில் இருந்த தனி நபர் சாட்சிகளை சார்பு ஆய்வாளர் என் முன்னிலையில் இந்த வழக்கில் சாட்சியாக இருக்குமாறு அழைத்ததாக ஆய்வாளர் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். ஆய்வாளர் என்னை விசாரித்ததை எழுதினாரா அல்லது டைப் செய்தாரா என ஆய்வாளர் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். சம்பவ தேதியில் சார்பு ஆய்வாளர் மலைச்சாமி என் உயர் அதிகாரி என்றால் சரிதான். பிரகாஷ் என்னுடன் பணிபுரிந்த போலிசார் ஆவார். சம்பவ தேதியில், சம்பவ இடத்தில் எதிரி இல்லை என்றாலும், எதிரி கெட்ட வார்த்தையால் பேசவும் இல்லை என்றாலும் , கொலை மிரட்டல் விடுக்கவில்லை என்றாலும், அத்தாட்சி மற்றும் சான்றுப் பொருள் காவல்நிலையத்தில் வைத்து பின்னிட்டு தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ளது போல் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றாலும் சார்பு ஆய்வாளர் மற்றும் ஆய்வாளர் அறிவுறுத்தலின் பேரில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை – இல்லை.</u>**

/ஒப்பம்/

XXXXXXX

Taken down by me in open court read over to the witness, admitted by him to be correct this contains a full and true account of the statement Made by the witness.

SWARNAM J RAJAGOPALAN

Digitally signed by SWARNAM J RAJAGOPALAN
Date: 2026.03.06 21:47:30 +0530

Additional District and Sessions Judge,

Dindigul.